# மேல்மாகாண கல்வித்திணைக்களம்
# சைவநெறி - Saivaneary
# தரம் 06 – Grade 06
# செயலட்டை 02

## பஞ்சபுராணம்

- பஞ்சபுராணங்களை ஒழுங்காக எழுதுக ?
- பஞ்சபுராணம் ஓத முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுவதன் நோக்கம் யாது?
- பஞ்சபுராணத்தை ஓதுவதனால் நாம் அடையும் நன்மைகள் யாவை ?
- பஞ்சபுராணங்கள் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
- பஞ்சபுராணத்தை ஓதிய பின் பாடப்படுவது யாது ?
- “இடரினும் தளரினும்….” என்ற தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது ? பாடியவர் யார் ? பாடப்பட்ட தலம் எது ?
- “பித்தாபிறை சூடி…” என்னும் பதிகம் யாரால் எத் தலத்தில் பாடப்பட்டது ?
- “ஓசை ஒலியெலாம்…” எனும் தேவாரத்தில் சிவன் எவ் வடிவில் விளங்குகின்றார் ?
- திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பாடியவர் யார் ?
- மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்ற சமயம் செய்த அற்புதம் யாது ?
- திருவிசைப்பா பாடியோர் எத்தனை பேர் ? அவர்களது பெயர்களை எழுதுக.
- பெரியபுராணம் பாடியவர் யார் ? பெரியபுராணத்தின் மறு பெயர்கள் இரண்டு தருக.
- திருத்தொண்டர் புராணம் எனச் சிறப்பிக்கப்படும் நூல் எது ?
- உலகெலாம் என்று ஆரம்பித்து உலகெலாம் என்று முடியும் காப்பியம் எது ?
- பின்வருவனவற்றிற்கு பொருள் தருக
    - சிவலோக நாயகன் -
    - பூமி –
    - தேச விளக்கு –
    - கழல் -
    - வேதியன் -

### தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| (அ) பெரியபுராணம் | ஓசையொலியெலாம் |
| (ஆ) திருவாவடுதுறை | விபூதி |
| (இ) திருநாவுக்கரசு நாயனார் | பல்லாண்டு வாழ்க |
| (ஈ) வெண்ணீறு | சேக்கிழார் |
| (உ) திருப்பல்லாண்டு | காந்தார பஞ்சமம் |

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக**

1. திருப்புகழின் ஆசிரியர் அருணகிரிநாதர் ஆவார். ( )
2. பஞ்சபுராணம் ஓத முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்ல வேண்டும். ( )
3. “பூசுவதும் வெண்ணீறு..” என்ற பதிகம் சிதம்பரத்தில் பாடப்பட்டது. ( )
4. கைலைக் காட்சியை சிவன் திருவையாற்றில் நாவுக்கரசருக்குக் காட்டினார். ( )
5. தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருப்புகழ் என்பன பஞ்ச புராணங்கள் ஆகும்.( )